Paper. 10¾ × 9¾ inches. Foll. 35. Lines, 14 in a page. Tamil. New.

Restored in 1923–24 from a MS. in the Library.

இலக்குமிவெண்பா.
ILAKKUMIVEṆPĀ.

Same work as that described under R. No. 430, having been restored from the MS. described therein.

(த-பு.)—

இது, மேலருடக் காட்லாக் 430-ஆவது நம்பர் பிரதியைப் பார்த்து எழுதப்பெற்றது. அதிலுள்ள அளவே இதிலுமுள்ளது.

R. No. 570.

Paper. $10\frac{1}{2} \times 9\frac{1}{2}$ inches. Foll. 46. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1923–24 from a MS. of Vānamāmalai Śri Rāmānuja Jīyarsvāmi, Vānamāmalai Mutt of Nanguneri.

(a) மணவை திருவேங்கடமுடையான் மேகவிடுதூது.
MAṆAVAI TIRUVEṄKAṬAMUḌAIYĀN MĒGHAVIḌU-TŪDU.

Foll. 1a—10b.

A poem in which a lady is represented as having sent her love-message to god Tiruvēṅkaṭanātha of Maṇavai. The name of the author is not given.

Complete.

Beginning:

திருவேங்கடமுடையான் மேகவிடுதூது.

பொன்பூத்த தண்ணம் புயல்பூத்த பூங்கமல
மின்பூத்த சோதி மினிர்மார்பா—கொன்பூத்த
நேமி சுடராய் நிலாவனை யான்மதியாய்ப்
பூமடந்தை மின்னுருவாய்ப் பூவைநிறங்—காமர்
புயல்முகந்த காவிப் புதுநிறமாய்ப் பொன்னு
ணியல்முகந்த வில்லி னியல்பாய்ச்—செயல்முகந்த
மேகமே யெல்லா வுயிர்க்குமொரு வித்தாகத்
தாகமே தீர்க்குந் தருமமே—நாகத்துக்
கொண்மூவே விண்ணுடர் கண்டு தொழுந்தகைய
வெண்மூவர் தங்களுக்கு மேற்றமே—தண்மூடு
மஞ்சே கு[ள](ழ)ற்குவமை வாய்ந்து தலைக்கொண்டே
செஞ்சொல் வி[ளி](ழி)மாவேர் செல்வமே—யெஞ்சாத
கொண்டலே [கொண்]தண்டார் குறித்தநா ளின்றளவு
முண்டலே . . . . வருகினேன்—தண்டாத
மையே மணவைமால் மாவ[ழி](ளி)த்த நாளளவு
[மெய்]மெய்யே யுருகி வெது[ப்](ம்)பினே(ன்)—பெய்(யு)
மழையே யுலக மகிழ்விப்ப தன்றிப்
பி[ளை](ழை)யேதுஞ் செய்யாத பேறே—குழையு

End:

நிற்கின்ற வண்ணமெல்லா நீலமுகி லேகுளிர்ந்த
சொற்கொண் டிதம்பார்த்துச் சொல்லியு—முற்பணிந்து

வில்லியல் கொண்டரக்கர் வென்றிகொண்டு மேற்கொண்ட
மல்லியல் கொண்டு மறங்கொண்ட—நல்லெழில்சேர்
வண்டுளவத் தாதொழுகு மால்வேங் கடநாதன்
வண்டுளவத் தார்வாங்கி வா.

வெண்பா.

மேக மெனமணவை வேங்கடமா மாயனுக்கென்
மோகமே சொல்லு முறைசொல்லி(த்)—தாகமே
மாலைதா யேனி?யென வாடாமல் தண்டுளவ
மாலைதா னீவாங்கி வா.'

Colophon:

சுவாமி தென் திருவேங்கடநாதர்பேரில் மேகவிடுதூது முடிந்தது, முற்றும்.

அாநடுஞு [அற்](ஐப்)பசிமீ மே முகிந்தது. இந்த ஏடு எழுதினேன், திருவேங்கடமுடையான் திராவிடதீர்த்தான் எழுத்து.

பெரியநம்பி அய்யங்கார் திருவடிகளே சரணம்.

(கு-பு.)—

இது, மணவைத் திருவேங்கடநாதன் என்னும் திருமால்மீது, ஓர் பெண்பால் மயல்கொண்டு மேகத்தைத் தூதனுப்பியதாக அமைந்ததொரு நூல். தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்று. நடை நன்றாகவுளது.

இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை. இந்தப்பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

(b) மணவை திருவேங்கடமுடையான் பிள்ளைத்தமிழ்.
MAṆAVAI TIRUVEṄKAṬAMUḌAIYĀN PIḶḶAITTAMIḺ.

Foll. 1*a*—46*b*.

A Prabandha technically known as Piḷḷaittamiḻ, written in praise of god Śrīnivāsa worshipped in Maṇavai. The name of the author is not given.

Incomplete.

Beginning:

ஹரி : நன்றாக.

சுவாமி திருவேங்கடமுடையான் பிள்ளைக்கவி.

பொன்னு ராழிப் புடைசுமந்து புவனங் காக்கும் பூவை வண்ண(ப்)
புத்தேள் மணவை நகர்பொருந்து புயலைத் திருவேங்கட முகிலை(த்)
தென்னு ரமுதத் தமிழ்ப்பனுவல் தெளிந்து பிள்ளைத் தமிழ்பாடுஞ்
செய்ய பதந்தோறினுங் காக்கச் செய்யுங்கருணை இளைத்தோங்கி
முன்னுள் மறைநா வாயிரமாய் முறையாற் றுறைச்செந் தமிழ்மாலை
மொழியுந்தோறு மனங் களிப்ப மொழிந்த கனிவாய் முகிழ் முறுவல்
பன்னுளடியா ருளம் விளங்கப் பாணித்துறையும் பராங்குசனூற்
பாவேந்தருக்கும் வேந்தனிணைப் படருங்கிரணப் பதயுகமே. (க)

* * * *

செங்கீரை.

தருமங்கை தருவென்ற சனகன் கணன் ?
மங்கை தாளஞ்செய முலேமுங்கவே ?
தழுவும் பொன் வரைவென்று வளரும்பு
யசுகந்த தனதந்தவென விஞ்சையால்,
நிரைகொண்டு வரிவண்டு துளவின்க
ணறையுண்டு நிறைதொங்கல் புனைநந்தனே
நிலனும் புலனுமங்கி வெளியண்ட மிவையன்றி
நிமிருங்க ருணை நம்பனே,
[வு](யு)ரைகொண்ட தமிழ்நண்பி னவர்பின்பி
னிநடந்து முயர்சங்க பிரசங்கனே
உரலுந்தி மருதின்கண் ணடுவின்கண்
ணுதைதந்த வுகளஞ்செய் பததந்தி[ற](ர)னே,
திருமங்கை திரைமங்கை புணர்கொண்க
புயவிந்த செங்கீரை யாடியருளே
செருவோங்க டலிபஞ்சொல் திருவேங்க
டமுகுந்த செங்கீரை யாடியருளே. (க)

End:

கஞ்சன்விடு சகடுருள நின்றவிரு மருதுபொரு
சதுரமுதர் வெற்றிமக . . . .
. . . .
செஞ்சரண கிரண வெயில் (. . . .)
ங்குமணி மரும (. . .)
சிறுபறை முழக்கியருளே
. . . வளைகுலவு குண ப[ள](ழ)ன மணவைமுகில்
சிறுபறை முழக்கியருளே.

சிறுபறை முற்றும்.

சிறுதேர்.

வாரென . . . .
சலேக்கெட . . . . . . பயத்தேருலவு கானுற
* * * *
ரொன்றில் கார்தேர் பத்தும் வென்றான்
சிறுவ சிறுதேருருட்டியருளே. (க)

கனமணி . . . .

(கு-பு.)—

இது, மணவைத் திருவேங்கடமுடையான் விஷயமாக வமைந்த பிள்ளைத் தமிழ் என்னும் ஒருவகைப் பிரபந்தம். இயற்றியவர் பெயர் முதலியனவொன்றும் விளங்கவில்லை. இந்தப் பிரதியில் சிறுதேர் நீங்கலாக மற்றையொன்பதும் உள்ளன. இடையிடையே சில பதங்களும் எழுத்துக்களும் தொடர்களும் இல்லை. எழுத்துப் பிழை மிகுந்துள்ளது.

R. No. 571.

Paper. 10½ × 9½ inches. Foll. 47. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1923-24 from a MS. of M.R.Ry. Subbayyavādyār Avargal, Matālayam, Peṭṭaimaḍam, Sholavandan, Madura district.

(a) கரணசிகை.

KARAṆAŚIKAI.

Foll. 1a—14b.

A treatise explaining the Tattvas or categories in accordance with the Śaiva-Vēdānta.

Complete.

Beginning:

கரண சிகை.

ஓங்காரமென்னும் பிரணவத்திலே அகார உகார மகாரமென்னும் இந்த பீஜாக்ஷரங்களுண்டு. இதில் அகாரமே நாதம். உகாரமே விந்து. மகாரமே க[ளே](லை). மற்றும் அகாரமே ருத்திரன். உகாரமே மகேசுரன். மகாரமே சதாசிவன். அகார உகார மகாரங்களுக்கு நாதபிந்து க[ளே](லை)களே ஆதாரம். அந்த நாதபிந்து க[ளே](லை)களுக்கு பிரகிருதியே ஆதாரம். அந்த பிரகிருதிக்கு பிராணனே ஆதாரம். அந்தப் பிராணனுக்கு லிங்கமே ஆதாரம்.

End:

இனி திரிகரணங்களாவன—மனம், வாக்கு, காயம் என்பனவாம். யாதொன்றையும் நினைப்பது மனம். யாதொன்றையுஞ் சொல்லுவது வாக்கு. யாதொன்றையுஞ் செய்வது காயமென்றறியவும்.

இனி பஞ்சாக்கினிகளாவன—உதராக்கினி, மந்தாக்கினி, சோகாக்கினி, காமாக்கினி, வடவாக்கினி என்பனவாம்.

இனி நவாம்சங்களுக்கு விவரம்—மாதா அம்சம் ௩. பிதா அம்சம் ௩. ஜீவாம்சம் ௩. எங்ஙனமெனில்—உதிரம், மாமிசம், சர்மம் இந்த மூன்றும் மாதாம்சம். அஸ்தி, நாடி, ரோமம் இந்த மூன்றும் பிதாம்சம். அக்கினி, வாயு, ஆத்மா இந்த மூன்றும் ஜீவாம்சம் என்று அறியவேண்டியது.

Colophon:

கரண சிகை முற்றிற்று.

தெய்வமே துணை.

(கு-பு.)—

இந்நூல் சைவ வேதாந்த விஷயமானது. ஓங்கார முதல் பிண்டாண்டம் வரை உள்ள தத்துவங்களை விளக்குவது. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

(b) உத்தரகீதை.

UTTARAGĪTAI.

Foll. 15a—47b.

A Tamil rendering, different from the printed edition, of the Sanskrit Uttaragītā which forms part of the Aśvamedhaparvan of the Mahābhārata. Arjuna, having forgot the philosophy of the Bhagavadgītā, requested Kṛṣṇa to explain to him the great truths once more and Kṛṣṇa instructed Arjuna accordingly in the Uttaragītā.

Complete in three Adhyāyas.

உத்தர கீதை முதலத்தியாயம்.

மகாபாரதத்திலே தருமக்ஷேத்திரமான குருக்ஷேத்திரத்திலே, அருச்சுனன் கிருஷ்ணஸ்வாமியாலே கீதை பதினெட்டு அத்தியாயமும் உபதேசிக்கப்பட்டு, அந்த அர்த்தத்தை விஷயபோகப் பிரபலத்தினாலே மறந்தவனாய்த் திரும்பவும் அ[ஸ்] (ஶ்)வமேத பருவத்திலே முன் மறந்த அந்தத் தத்துவ ஸ்வரூபமே நன்றாய்த் தெரியத்தக்கதாக அவன் கேட்க, பகவானும் உத்தர கீதையை மூன்று அத்தியாயத்தினாலே போதிக்கிறார். அந்த அர்த்தம் விற்பன்னரான ப்ராகிருத முமுக்ஷுக்களைக் குறித்துத் தமிழினாலே சொல்லுகிறோம். அதெப்படியென்றால், அர்ச்சுனன் முந்தின கிரந்தத்தினாலே கேட்கிறபடி—

சுவாமி—குரு உபதேசமான உத்தரக்ஷணத்திலேதானே, அவித்தை நிவர்த்தியாய் எந்த ஸ்வாநுபவஞானமுண்டாகுமோ, அந்த ஞானம் சொல்லுமையாவென்று கேட்கிறான்.

எங்ஙனமெனில்—பிரம்ம் ஏகமானது. ஏகமென்றால், சுஜாதிக, விஜாதிக, சுகத பேதரஹிதம். இதற்குத் திருஷ்டாந்தம், இந்த ஸ்தாவர ஜங்கம ரூபமான பிரபஞ்சத்திலே மரத்துககு மறுமரம் சுஜாதிபேதம். மரத்துககுக் கல்லு விஜாதிபேதம். மரத்துக்குப் பத்திர புஷ்ப பலாதிகள் சுகதபேதம். இன்னம், ஒரு புருஷசரீரத்துககுத் தேவசரீரம் சுஜாதி பேதம். அந்தப் புருஷ சரீரத்துக்குத் திர்யக் சரீரம் விஜாதிபேதம். தந்தம், நகம், ரோமம் முதலியன சுகதபேதம். இப்படிப்பட்ட பேதம் ஆத்மாவினிடத்திலில்லாமல், ஏகமானதாய், அவயவரஹிதமாய், பிரமசொரூபமாய், பிரமாணங்களினாலே அறியப்படாததாய், காலத்ரயத்தாலும் பாதிக்கபபடாததாய், பிரபஞ்ச உத்பத்திக்கு நிமித்த உபாதான காரணமாய், பின்னை வேறே ஒரு வஸ்து ஸம்பந்தமில்லாததாய், ஏது சாதனமில்லாததாய், ஸகலலோக அந்தர்யாமியாய், ஞாதுரு, ஞான, ஞேயசொரூபமாய, ...

. . . .

இப்படிப்பட்ட பிரம சொரூபத்தைத் தெரியச் சொல்லுமையாவென்று அருச்சுனன் கேட்டதற்கு, கிருஷ்ணஸ்வாமி ஸந்தோஷப்பட்டு மேல் கிரந்தத்தினாலே. உத்தரஞ்சொல்லுகிறார். (க)

End:

சீத உஷ்ண சுகதுக்க முதலான தொந்தமில்லாமல் ஆத்மாவினிடத்திலே நின்றால், விஷயசுகத்திலே பிரயோஜனமில்லையென்று தாற்பரியம். இப்படிப்பட்ட மோக்ஷாபேக்ஷையுண்டான யோகிக்கு அன்னிய விஷய சிந்தையில்லையென்று மேற் கிரந்தத்திற் சொல்லுகிறார். (கரு)

யோகியானவன் மோக்ஷத்தை எவ்வளவு காலம் சிந்திக்கிறானோ, அவ்வளவுக்கும் தேகரக்ஷணார்த்தம் பிக்ஷான்னம் சிந்திக்கிறதே யல்லாமல் இந்திரி

யங்கள் [பி](ப)லக்கவேண்டியதல்ல. சீததிவாரணமாக வஸ்திரந் தரிக்கிறதே யல்லாமல் அலங்கார நிமித்தமல்ல. அவனுக்குப் பொன்னும் ஓடும் சரி. வெறுங்கீரையும் உண்டான அன்னமுஞ்சரி. போக வஸ்துக்கள் வந்ததனாலே சந்தோஷமும், வாராததனாலே விசாரமும் இல்லே. இப்படிப்பட்ட யோகீசுவரனே ஜீவன் முக்தன்.

Colophon:

மூன்றுமத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி ஸஹாயம்.

(கு-பு.)—

இது, வடமொழியிலுள்ள மகாபாரதத்து உத்தரகீதை யென்னும் வேதாந்த நூலின் மொழிபெயர்ப்பு. மூன்று அத்தியாயங்களையுடையது. கிருஷ்ண பகவான் முன்பு உபதேசித்த பகவத்கீதையைக் கேட்டும் அர்ச்சுனனுக்கு மீட்டும் சந்தேகமுண்டாக, அதைத் தெளிவிக்கும்பொருட்டு உபதேசித்தது. இது அச்சிடப்பட்ட பிரதியினும் வேறாகவுளது. இதை மொழிபெயர்த்தவர் இன்னாரெனத் தெரியவில்லை.

R. No. 572.

Paper. 10½ × 9½ inches. Foll. 12. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1923-24 from a MS. of M.R.Ry. Vēlukumārappiḷḷai Avargaḷ, cloth merchant, Palani, Madura district.

பழநிப்பதிற்றுப்பத்தந்தாதி.

PALANIPPADIṞṞUPPATTANTĀDI.

A Prabandha in 100 stanzas technically known as Padiṟṟupattantādi in praise of god Subrahmaṇya worshipped in Palaṇi.

Complete.

Beginning:

பழநிப்பதிற்றுப்பத்தந்தாதி.

மயிற்பரியான் றென்பழநி வாழ்குமரன் மீதிற்
பயிற்றுப்பத் தந்தாதி பாடக்—கயிற்கனிகொள்
சுப்பிரமண் யக்கணப திக்துரைய ருட்பெருகுங்
கற்பகமு ஏர்ப் பதமே காப்பு

ஹரிஃ ஓம்.

நன்றாக குருவாழ்க.

குருவே துணை.

அருளதனைப் போ[லவெ](லெ)ழு[ந்](ந்)து[வர்] நீர்
அருந்தத் திருமாலென் முகில் வான்
பொருளுற் றுல[கு](க)ஞ்செழிக்[கு](க) மழை
பொழியும் பழநிக் கிரியான் மெய்,
தெருளத் தெளிய வடியமையான் (?)
செவ்வேட்குமரன் றினமு மெ[ந்](ன்)றன்
மரு[ள](ளை)த் தடிந்து விண்மணியாய்
மலர்க்கண் ணெதிர்வந் துதித்தனனே.

* * * *

வேதமு தல்வா பழ[னி](நி) மலை
விமலா வமலா குறத்திபங்கா
சோதி வடிவே மெய்ஞ்ஞானச்
சொரூபானந்த முருகா வென்
றோதி யுருகி நினையாம
லுதரக் கொடுமைப் பிணிமயக்கம்
மீதி மனதைச் செலவிட்டு
வீணே பொழுது போக்கினனே. (ச)

End:

கந்தாவெ மக்குதவி செய்தகதாய் தந்தை நீ
காக்கின்ற விறையவனு நீ
சந்தேக மில்லையென துடலாவி யும்பொருள்
தத்தம தளித்த மனமே
நொந்தாலு முன்சித்தம் வந்தாலு முன்சித்தம்
நோக்கத்தி லதிக பதவி
தந்தாலு முன்சித்தம் வை[கா](யா)புரிப் பழ[னி](நி)
சார்வான தெய்வ முதலே. (கக)

முதலாய சவுந்தரிய மயிலா தமிழ்ப்பழ[னி](நி)
மூத்தே சிறக்கு மூமையாள்
மதலாய் குறத்திமண மகனே வயிற்பெருகு
வையாபுரிக் காதிபா
சதகோடி சித்தர்பணி சரணு மகிழ்ச்சிநிலை
தரு ஞானபத்தி யுடையாய்
கதையே பிடித்தவிரு கரனே யெமக்குதவி
கமலக் கடாட்சமருளே. (௩)

முருகன்றுணை.

(கு-பு.)—

இது, பழநி யென்னுந் தலத்திலமர்ந்துள்ள முருகக் கடவுள் விஷயமான தோத்திரம். நூறு விருத்தங்களாலாகியது. இயற்றியவர் இன்னரெனத் தெரியவில்லை. செய்யுள்நடை சாதாரணமானது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

R. No. 573.

Paper. 10½ × 9½ inches. Foll. 156. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1923–24 from a MS. of the Maharaja of Ettayapuram, Tinnevelly district.

அநுபவவைத்தியம், இரண்டாம பாகம்.

ANUBHAVAVAIDYAM, Vol. II.

A treatise on medicine. It forms the latter portion of the work described under R. No. 566 ante.

End:

அகத்தியன் குழம்பு.

சருவலீசுவரனுர் லோகஞ் சகலமும் படைத்தவருநாள்
பொறுமையா யுலகில்வாழும் புண்ணிய சனங்களுக்கு
உறுபலவியாதி வந்தால் தீருமென் றுண்மையாகப்
பெறுபல னிதுவேயென்று பேசினுர் முனிவர் தாமே. (க)

பேசிடு மருந்து கேளாய் பெருங்காயங் கடுகிந் துப்பு
வீசிய ரசம்பொற் காரம் வியன்மனே சிலேயுங் கூட்டி
ஆசில்லாத் திப்பிலிதான் தகட்டரி தார மெல்லாம்
மாசில்லாக் கருஞ்சீரகம் வகைவகை கழஞ்சி வாங்கே. (உ)

வாங்கிய கழஞ்சி யொன்பான் நேர்வாளம் வறுத்திப் பாதி
தாங்கிய பச்சை பாதி சமன்மூளே போக்கி நீக்கித்
தீங்கில்லா மருந்து பத்து சேரவே யரைக்கக் காந்தல்
போங்கிடில் மோருஞ் சோறு முண்டு நீ யரைத்துக் கூட்டே (௩)

கூட்டிய மருந்தின் பேரை யகத்தியன் குழம் பதாக்கு
மீட்டிய சுரமே சுக்கு இருமலே கடுக்காய்ச் சாறு
வாட்டிய குளிர்சுரங்கள் வந்திடில் மிளகுத் தூ ளில்
பாட்டில்லா விரத்த மூலம் நெய்யினில் மத்திப் பாலே. (௪)

* * * *

பாராய் கபால வலிமுதலாய்(ப்)பசாசு பறக்குதிரிப்புகையில்
நீராயெடுக்கு நீர்ச்செறுப்பு நீர்க்கல்லடைப்பன் தர்[ளோ](மை)விளிர்
தீராக்கிராநீதி பாங்கிருதல் தீருங்குப்பைச் சாற்றிலிடு [கீர்த்,
சீராய்க்கேட்கும் சலவிஷமும் தீருஞ்சிறுகத் திரிப்பிடியே. (அ)

(கு-பு.)—

இதுவும் அநுபவ வைத்தியமே. இந்தக் காட்லாக்கின் 566-வது நம்பர் பிரதியில் வந்துள்ளதின் உத்தரபாகம் இது.

R. No. 574.

Paper. 10½ × 9½ inches. Foll. 439. Lines, 20 in a page. Tamil. Good.

Restored in 1923–24 from a MS. in the library.

பாரதவெண்பா, உரையுடன்.
BHĀRATAVEṆPĀ WITH COMMENTARY.

Same work as that described under No. 526 of the D.C.T. MSS., Vol. II, from which this was restored for the library.

Contains only 722 stanzas out of 12,000 stanzas.

(கு.-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக் 526 ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ளதைப் பார்த்து எழுதப்பெற்றது. அதிலுள்ள அளவே இதிலுமுள்ளது.

இது அச்சிடப்பட்டுள்ளது.

R. No. 575.

Paper. 10½ × 9½ inches. Foll. 42. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1923-24 from a MS. of M.R.Ry. Vēlukumārappiḷḷai Avargaḷ, Palani, Madura district.

திருமலையதிபர்பள்ளு.
TIRUMALAIYADIPARPAḶḶU.

A kind of Prabandha written in praise of Tirumalaiyadipar of Kuṟṟālam: by Periyavan-kavirāyar.

Complete.

Beginning:

திருமலையதிபர்பள்ளு.

சிவசிதம்பரம்.

குடவாரணச் செங்கையம்மான் மருகன்குகன் குமரன்
திடவாரணக் கொடிச்செவ்வேள் திருமலைச் சேவகன்சீர்
படவாரணம்பகர் வாயானைப் பாடிய பள்ளிசைக்கே
கடவாரண முகக்கட்டிவிநாயகன் காப்பென்றுமே.

* * * *

திருமலையதிபர்பேரில் பள்ளு.

பார்தந்த பன்னிரு கரப் பிரமன்
போர்தந்த கன்னல் விற்புயச் சிரமன்
பரித்தருளாரணச் சரவணத்தான்
திருச்சரவணத்தான்
பேர்தந்தெனை யினங்கரு மலையான்
பிணைதந்த பெண்புணர் திருமலையான்
பீடுயர் தமிழ்ப் பள்ளிசைச் சிறியேன்
பாடவந்துதவும்,
சீர்தந்திலர் முனம் வந்து தோன்றுன்
ஏர்தந்திடும் நயனங்கள் மூன்றுன்
செவிசேரழ கெனப் படைத்தான்
குடவயி றழகெனப் புடைத்தான்,
வார்தந்ததோர் தவக் கொம்புடையான்
வல்லபை யென்றொரு பவளக்கொம்புடையான்
மதத்தாரை கள்பொழி கவுட் கரிமுகன்
பதத் தாமரையே.

* * * *

(இன்னிசை)

சித்தசனன் மைத்துனவேள் தெய்வவள்ளி காதலனுங்
கர்த்தனெனை யாண்டருளுங் காவித் திருமலையான்
கொத்த[டு](டி)மைப் பள்ளர் குலவிளக்காங் கும்பமுலை
முத்தநகைச் செங்கனிவாய் மூத்தபள்ளி தோன்றினளே. (க)

End:

பெருமையாய்த் தங்(கை)கச்சி யென்றெண்ணுமல் பேசினுய்—நீயும்
பெற்றபிள்ளையாலுல் சொல்லப் புத்திவருமோ
அருமையானதாய்த் துணையல்லவோ துணையென்றே—நீயும்
அன்புவைத்தாற் சண்டையுண்டோ தங்கைப் பள்ளத்தி. (௱கூ)
போனதெல்லாம் போகட்டும் நாமிருபேரும்—பள்ளன்
புத்திக்குள்ளாய் வாழ்ந்திருப்போஞ் சித்திரமாக
வானவர்தொழுங் குற்றலர் திருமலைவேலர் பதம்
வணங்கி வாழ்வோம் நாமிருபேரும் இணங்கி நாளுமே. (௱கச)
வாழி திருக்குற்றல(ம்) வாழி திருமலையான்
வாழி யடியாருலகம் வாழியதே—வாழியிந்தச்
செந்தமிழைக் கற்றேர் செவியாரக் கேட்கின்றேர்
சந்ததமும் வாழி தலமுத்து.

Colophon:

திருமலையதிபர் பள்ளு முகிந்தது, முற்றும்.

இஃது பெரியவன் கவிராயர் அருளியது.

(கு-பு.)—

இது, ஒருவகை ப்ரபந்தம். குற்றலத்திலிருந்த திருமலையதிபரைப் புகழ்ந்துரைப்பது. இயற்றியவர் பெரியவன் கவிராயர் என்று தெரிகின்றது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

R. No. 576.

Paper. 10½ × 9½ inches. Foll. 59. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1923–24 from a MS. of the Maharaja of Ettayapuram, Tinnevelly district.

வைத்திய நூல்.

VAIDYANŪL.

A treatise on medicine describing the symptoms of various kinds of diseases, and the preparation of medicines, medical powders and oils for curing these diseases.

Beginning:

கறுத் தக்காளி குணம்.

கறுக்கும் பல்லும் வாய் நோயும் கண்டால் குணங்க ளப்படியே
வறுக்கும் வயிருல் வயி . . . து மதியத்தலையும் நோவாகும்
உறுப்பும் பொல்லா துணர் வழியு முள்ளே[மி](ம)லமுங் கட்டுண்ணுங்
கறுத்தக் காத்தின் குணங் கண்டால் கொல்வனென்று கருதுவீரே. (க)

குதிரைவலிப்பின் குணம்.

கண்ணிற் புருவம் விழியாது கரமுங் காலு மொருபக்கம்
எண்ணிச் சன்னி வாதத்தி னிதுவுங் குதிரைவலி யெனன
வெண்ணு நுரையுந் தான்தளமு மிகவே திருகவலி யுண்டாம்
விண்ணைப் பார்த்து வலிதிற்கு மீளாதிதுவு மெல்லியரே. (உ)

* * * *

ஒருதலைவலிக்கு மருந்து.

குதிரைக்குளம்பு, குங்கிலியம், நாரத்தம்பழச்சாறுவிட்டரைத்து ரோகிற பக்கத்தில் நசியம் விடவும் ; தீரும்.

நொச்சிமேல் புல்லுருவி பொடிசெய்து சுங்காணியிலே வைத்துப் புகை மூக்காலே வாங்கவும் தீரும். கைகண்டது.

* * * *

மூன்று ஊமச்சி யெடுத்துவந்து நல்லெண்ணெயில் வேகவைத்து மாறு பாகமாகக் காதில் வார்த்தடைக்கவும். தீரும்.

கையாந்தகரை சிறுநீரில் பிசைந்து சாறு மாறுபாகமாகப் பிழியவும். தீரும்.

End:

பெருங்குமரி[ப்] பற்பம்.

நாலுருந் சிலையிரண்டு நல்லகந்தகம் நாலிரண்டு
காலக்காந்த மிதுக்கிரட்டி கச்சோல மிதுக்கிரட்டி
ஏலங்குழலா ளம்மியிலே யிசைந்தகுமரிச் சாற்றலரைத்து(த்)
தாலத்துள்ளே தம்பிவைக்க(த்) தணலாயெரிப்புங் கண்டீரே.

கண்டீர் குணமம்பீலிகையுடன் கனத்தபித்த பாண்டுவும்
மண்டுங் கவிசைகோறரமும் வாயுத்திரட்சி குடல்புரட்டும்
உண்டாலவரனு[ர்] ரேயூபுளித் தேக்கும் . . . . .
கொண்டாலிதனைத் தேனுடனே குணமாம் குணமாம் குறி[வ](ய)றிய.

(வேறு)

இரதம், கெந்தகம், ஜாதிலிங்கம், அரைபொடி, காந்தம், பெருங்காயம் ஆக இ[து](வை) சரிகூட்டி(க்) கற்றுழஞ்சாறுவிட்டு நன்றுயரைத்து(ச) சில் லுப்போலே பிடித்து, உலரவைத்து, உலர்ந்ததைத் திரும்பப் பொடிசெய்து வைத்துக்கொண்டு ஒருபண [வி](வெ)டை தேனிற் கொள்ளவும்.

இதற்கு வலிகுன்மம், பக்கசூலை, நாபிசூலை இ[து](வை)யெல்லாந் தீரும். இரண்டுநேரமும் கொள்ளவும். பத்தியம், பால் நெய் வெள்ளாட்டு உப்புக் கண்டம் கூட்டவும்.

(கு-பு.)—

இது, பலவகை நோய்களின் விதங்களையும் அவற்றைத் தவிர்க்கும் வைத்திய முறைகளையும் பஸ்மங்களின் முறைகளையும் தைலமுதலிய முறைகளையும் கூறுவது. இது சிறந்த நூல்.

R. No. 577.

Paper. 10½ × 9½ inches. Foll. 124. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1924-25 from a MS. of M.R.Ry. Kōmbai Śaṅkaranārāyaṇa Vādyār Avargaḷ, Uttamapalayam, Madura district.

அரிட்டநவநீதம்.

ARIṬṬANAVANĪTAM.

A treatise in astrology, predicting from the relative positions of the nine planets at the time of the birth of a person, the nature of the evils likely to befall to his father, mother, brother and other close relations. The pacificatory ceremonies to be performed for averting these evils are also stated herein.

Complete.

Beginning:

ஜாதக பாவம். அரிஷ்ட நவநீதம்.

அரிட்ட நவநீதம்.

பிள்ளை, பிதா, மாதுலன், மாதா, மாதாவின் தகப்பன், (பெந்து, பிதாவின் தந்தை,) தமையன் ஆக எட்டுபேருக்கும் அரிஷ்டஞ்சொல்ல.

வாசமு மடையுஞ் சூழும் வனஞ்சேர் வாவி காந்தி
வீசிய சேட்டலூர் வாழ் வேங்கடாசாரியர்க்குத்
தேசிகன் செல்வனுன சேஷாத்திரி வேதியன்சொல்
நாசமிலா தரிட்ட நவநீதம் நாடிச் சொன்னர். (க)

நாடியே பாலாரிட்ட நவநீதந்தன்னைச் சொல்வேன்
நீடிய திரேக்காணத்தால் நிறை நவகிரகத்தாலும்
தேடிய சேத்திரத்தால் தெரிநவாங் கிசத்தினுலும்
வேடிக்கையாக நாலுவித மரிட்டத்தைச் சொல்வாம்.

(எ-து.) அரிட்ட நவநீதஞ் சொல்லும்படி—திரேக்காணத்தினுலும், நவக்கிரகத்தினுலும், நவாங்கிசத்தினுலும் நாலுவிதமாக அரிட்டஞ் சொல்லுவது. (உ)

சொல்லிய பிள்ளை தந்தை துய்ய மாதுலனே மாதா
வெல்லு மாதாவின் றந்தை பெந்துவும் பிதாவின் றந்தை
நல்லதோர் பிராதாவோடே நவின்றிடு மெட்டுப் பேர்க்கும்
வல்லமையாக வெட்டு வகையரிட்டத்தைச் செப்பாய். (ங)

* * * *

கொள்ளவே மாதாரிட்டங் கூறுவே னுதயத்துக்கு
விள்ளுமோ ரேழிலெட்டில் மிகுபாபக் கிரகநிற்கத்
தெளிய வோரை தன்னைத் தீயகோளாலே பார்க்கப்
பிள்ளையுந் தாயுந் தன்றுற் [பி]புரண்டிடும் பிசகில்லாமல்.

(எ-து.) மாதா அரிட்டஞ் சொல்லும்படி. ஜென்ம லக்கினத்துக்கு ஏழாமிடம், எட்டாமிடம் பாபக் கிரகங்கள் நிற்க, லக்கினத்தைப் பாவர் பார்க்கப் பிறக்கில் மாதாவும் பிள்ளையும் மரணம். (சா)

End:

அரும்பகல் சாதகர்க் கருக்கன் மந்தனில்
வரும்புட மிரண்டையும் வகையிற் கூட்டியே

பொருந்திய தொகையினில் புகழ் நட்சத்திரம்
திருந்திய தசையினிற் றேக மாயுமே. (உ௬௫)

மந்தபவ னுதிபதி மன்னுதசை தன்னில்
எந்தனப காரமதிலேமரண மென்பர்
அந்தமுறுகேந்திர தசை மங்கவரு மாரும்
சொந்தனபகாரமது சூழுதிரியாணம். (உ௬எ)

அம்புலிக்கெட்டாமிடத்துக் கின்பனங்கிசத்துக்கும்
அரியநாலாமிடத்துக் கதிபதியங்கிசத்தும்
வின்பமுற்றரவிவருங்கால மாதிருகண்டமென்பர்
விள்ளுமிதன் றிரிகோணந் தன்னி லுமிப்பலமாம்
வம்புறுமாந்தியின் புடத்தைமாதுருத்தானேசன்
மன்னுபுடத்துடன்கூடி மண்டலத்திற்கரந்தே
நம்பிநின் றமிச்சத்தி லமைச்சன்வருங்காலம்
நல்கியமாதுருகண்டம் நண்ணுமெனப்புகலே. (உ௬அ)

திருமலைராயப்பெருமாள்சுவாமி[பாதாரவிந்தத்]
திருவடிகளே சரணம்.
முற்றுப்பெற்றது.

(கு-பு.)—

இது சோதிட விஷயமானது. இராசி முதலிய சக்கரங்களில் நவக்கிரகங்கள் நிற்கும் நிலையைக்கொண்டு, பிறந்த குழந்தை, அதன் தாய், தந்தை, மாதுலன், மாதாமகன், பிதாமகன், பந்து, பிராதா என்னுமிவர்கட்கு அரிஷ்டம் இன்னின்னவெனவும் அவற்றிற்குச் சாந்தி இன்னின்னவெனவும் விவரமாகக் கூறுவது. இந்த நூல் மிகவும் பயன்படத்தக்கது.

R. No. 578.

Paper. 10½ × 9½ inches. Foll. 139. Lines, 20 in a page. Tamil. Good.

Restored in 1924-25 from a MS. in the library.

(*a*) மல்லிகார்ச்சுனமாலை.

MALLIKĀRCCUNAMĀLAI.

Fol. 1.

Same work as that described under No. 350 of the D.C.T. MSS., Vol. I, from which this was restored.

Incomplete.

(கு-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கின் 350 ஆவது நம்பர் பிரதியைப் பார்த்து எழுதியது. அதனளவே யிதிலுமுள்ளது.

(b) சுந்தரர்வேடுபறி.
SUNDARARVEḌUPAṚI.

Foll. 2a—9a.

This was restored from the work described under No. 352 of the D.C.T. MSS., Vol. I.

Complete.

(கு-பு.)—

இது டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கின் 352 ஆவது நம்பர் பிரதியைப் பார்த்து எழுதப்பெற்றது. முற்றுமிருக்கிறது.

(c) நெல்லைவருக்கக்கோவை.
NELLAIVARUKKAKKOVAI.

Foll. 9b—21a. Foll. 21b, 22 are left blank.

Same work as that described under No. 351 of the D.C.T MSS., Vol. I, from which this was recopied for the library.

Incomplete.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கின் 351 ஆவது நம்பர் பிரதியைப் பார்த்து எழுதப்பட்டது. அதிலுள்ள அளவே இதிலுமுள்ளது.

(d) தனிப்பாடற்றிரட்டு.
TANIPPĀḌAṚṚIRAṬṬU.

Foll. 23a—233a. Foll. 39b is left blank

Same work as that described under No. 362 of D.C.T. MSS., Vol. I, from which this was restored for the library.

(கு-பு.)—

இதுவும் டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கின் 362 ஆம் நம்பர் பிரதியைப் பார்த்து எழுதப்பட்டதே. அந்தப் பிரதியிலுள்ளவே யிதிலுமுள்ளது.

R. No. **579.**

Paper. $10\frac{1}{4} \times 9\frac{1}{2}$ inches. Foll. 30. Lines, 20 in a page. Tamil. Good.

Restored in 1924-25 from a MS. in the library.

தனிப்பாடல்.
TANIPPĀḌAL.

Same work as that described under No. 361 of the D.C.T. MSS., Vol. I.

(கு-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக் 361-வது நம்பர் பிரதியைப்பார்த்து எழுதப்பெற்றது. அதிலுள்ளவளவே யிதிலும் உள்ளது.

R. No. 580.

Paper. 10¼ × 9½ inches. Foll. 114. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1924–25 from a MS. of M.R.Ry. Periyasāmipaṇḍāram Avargaḷ, Palani.

ஸங்க்ரஹராமாயணம்.
SAṄGRAHARĀMĀYAṆAM.

A poem describing the story of the Rāmāyaṇa. It is mostly based on and follows the Kamba-Rāmāyaṇa. From the Pāyiram stanza it is made out that the author is Nārāyaṇa Ayyar, son of Aṇṇāvayyar of Neḍuvainagar in the Madura district.

Breaks off the Yuddhakāṇḍa.

Beginning:

சிறப்புப்பாயிரம்.

மதுரை ஸ்ரீ. தமிழ்ச்சங்கத்து வித்துவான் சோழவந்தான்
ம-ா-ா-ஸ்ரீ. சண்முகம் பிள்ளையவர்களியற்றிய
நேரிசையாசிரியப்பா.

சீர்திக ழுந்திச் செழுங்கம லத்து
நார்திகழ் மறைதேர் நான்முகற் றந்த
கார்திகழ் மேனிக் கடவுண்மூ வுலகுஞ்
சூர்திகழ் தெவ்வர் செய் துயரி னிற் றீர்ந்து
பேரு வகைக் கடல் பெட்பினிற் றிளைப்பத்
தாருலா மார்பத் தசரதன் சேயாய்(ப்)

* * * *

வடமொழி தென்மொழி வழங்கிய பனுவல்
புடவியிற் புணரியிற் புரைதபப் பரத்தலின்
நுண்ணறி விலருந் திண்ணிதி னுணர
வெண்ணிய பொருளெலா நண்ணுற(த்) தொகுத்து
விண்ணுறு புலவர் போன் மண்ணுறு புலவருங்
கண்ணுறு செவியினி னுண்ண நல் லமிழ்தினு
மினியதீஞ் சுவைதமிழ்த் தனியணிப் பாவா
னணியுளத் தன்பிற் கனிவுளப் பாடினன்

* * * *

நின்றசீர் குன்று நெடுவைமா நகர்க் கண்
வென்றசீர் மறையோர் வியன்குல மோங்க
வெண்ணு வெழுதா வியன்மறை முழுதுணர்
அணுசாமி யிருந்தவத் துதித்தோன்
நாரா யணபூ சுரநா யகனே.

* * * *

நேரிசை வெண்பா.

சானகிரா மன்கதையாஞ் சங்க்ரகரா மாயணப்பே
ரானதனைச் சோபகிரு தாண்டதனின்—மாநெடுவை
நாராய ணய்யன்செய் நற்றமிழை நானிலத்தோர்
பாரா யணஞ்செய்வார் பார்.

தற்சிறப்புப்பாயிரம்.

இந்துவை முடித்த பெம்மா னியம்பிட வுலகே ரேழுஞ்
சிந்தையி லுளதென் றுன்னுச் செய்நெடும் புவியைச் சூழத்
தந்தையை வலஞ்செய் தேமாங் கனிதரத் தனிக்கூத் தாடுஞ்
சிந்தர நுகத்தான் செம்பொற் றிருவடி தலைமேற் கொள்வாம். (௧)

புன்னிலத் துவிதை சென்(று)னவிக்குதிக
ரென்னமொய்த்து விளைபண்பினுற்
கன்னன்முத்துகஞ்ழதன்னை யொத்ததனைக்
காண்கிலா திரதிகாதல
னின்னும்மைவத்தசிலை யென்னின்மற்றுமுள
நன்னிலப்பெருமை யென்கொலாம்
பொன்னு(முத்து)மலைதன்னி லெற்றுகரை
பொருனைமாநதியின்னுடரோ.

* * * *

கலைவலான் கருணையுள்ளான் கமலையின் னேக்குங் காரே
மலைவலான் மடந்தை செம்பொன் மலரடி யுள்ளத் துள்ளா
னெலையிலாப் பெருமை யுள்ளா னியம்புதற் கரிய போத
நிலையுள்ளான் கலாவையென்னு நெடுநக ராட்சி யுள்ளான். (௯)

அலைகடலுலகுக்கெல்லா மந்தணர்மேலாமென்ன(ச்)
சிலைமலிவேந்தனுதி மூவருந்திருத்தாள்வேண்ட
கலைமதியரவம்பூண்ட கடவுளைநந்தெழுத்தேஞான
நிலையெனவருளும்வண்ண நீணிலத்துதித்ததித்தன். (௰)

கோத்திரமுனிமாண்டவ்ய குலத்தினிலுயர்ந்தோன்ஞான
சாத்திரமுணர்ந்தோனெச்சு சாகைபோதாயனத்தின்
சூத்திரவான்கல்யாண சுந்தரனருள்சம்பந்த
மூர்த்தியென்றுரைக்கும் ராமசந்திரமுனிவனய்யா. (௰௧)

வேறு.

தருவினுதனுக்கருளிய ராகவன்சரிதம்
பெருமையாஞ்சதகோடியைப் பேசுதற்கெளிதோ
வ[ரு](ரி)மையாமதன்பயனுள யாவையுமுணர்ந்தே
யிருமையாந்தமிழ்க் காவியந்தருகவென்றிசைத்தான். (௰௨)

தேவபாடையிற்செப்பிய யாவையுந்தேர்ந்த
நாவினுனுரைசெந்தமிழ்க் காவியநடைபோற்
பாவலோர்புகழ்வாரெனப் பாடினேனபதுமப்
பூவைநாயகன்சரித்திரச் சங்கிரகம் புவிக்கே. (௰௩)
தற்சிறப்புப்பாயிர முற்றிற்று.

ஸ்ரீராமஜயம்.

ஸ்ரீராமாயணம்.

(கடவுள் வாழ்த்து.)

பூதமைந்தும் பொருந்தினதாய்ப்புகழ்
வேதநான்கும் விளம்பறியாததா
யோதுமூன்றுளதா யிரண்டொத்ததா
மாதியொன்றென் னகத்துளதென்றுமே.

*　　*　　*　　*

நாட்டுச்சிறப்பு.

உலகமீன்ற வொருவனேயோதருங்
கலைகள்யாவுங் கருதுதற்கெட்டிவாத்
தலைவனன்னச் சதுர்மறைசாற்றுமந்
நிலையுளானையெந் நெஞ்சத்திருத்துவாம். (௧)

வாசவன்பதி மாமறையோன்பதி
கேசவன்விடைக் கேதனன்வாழ்பதி
பேசரும்புகழ்பெற்றியு முற்றசீர்(க்)
கோசலம்பதி நாட்டணிகூறுவாம். (௨)

*　　*　　*　　*

கூந்தலுங்குழையுஞ்சோரக் கொடியிடைகுழைத்துநீத்தம்
வாய்ந்தபெண்குழவிதன்னை மாதவமுனிவோரேத்தப்
பூந்தடச்சுனைநீராட்டிப் பொற்பணியாரமூட்டி
யேந்தபேர்சரயுவென்ன விமையவரியம்பலுற்றார். (௫)

*　　*　　*　　*

கிட்கிந்தா காண்டம்.

மசிறுதற்சவரிசொன்ன வழிவனங்கடந்துபம்பா
நதியருகிருந்த ரா(ம)னளினமாமலர்த்தாடன்னிற்
றுதிபெறுவாயுமைந்தன் றொழுதுபின்னங்கைகூப்பிக்
கதிர்மகன்பகையைத் தீர்க்குங்கடவுளேகருணைமூர்த்தி. (௧)

இந்தமாநகர்கிட்கிந்தைக் கிறைவன்சுக்கிரீவற்கண்ணன்
றொந்தவாலியின்போர்க்கஞ்சித் துறவன்மாமலையிலுள்ளா
னுந்தனுக்கடிமையாக வுறுதிகொண்டனுப்பவந்தேன்
மந்தமாருதத்தோன்மைந்தன் மாருதியடியேனென்றான். (௨)

End:

வாடினார் குரங்குவீரர் வார்கடல் கடந்துபோனார்
ஓடினன்வாலிமைந்த னுபசரித்தழைத்தவந்தான்
ஆடல்வெஞ்சிலையிராம னுசகமழையாய்ப்பெய்து
மூடினன்பிதிராவண்ண மோகனுத்திரத்தைத்தொட்டான். (௨௪௨)

அவரவர்கண் ணுக்கெல்லா மம்புயமலர்க்கண் ராம
னிவனவனென்னமோதி யிறந்த(ன)ரெம்மானெய்பு
நவம்குங்கணையான்மூன் று நாளி லுமுடிதன்ஞர்க்(?)
குவமையாரவர்கள்கையா லொழிந்கனர்மூகூர்த்தந்தன்னில். (உ௪௩)

* * * *

தேர்பெறும் பிணத்தில் யானைச்சென்னியை யேற்றச்செத்த
பேர்பெறும் வீசைதன்னைப் பிடுங்கிப்புல்லறுகாய்ப் பெய்து
வார்பெறுங்குடலைத் தாம்பாய் வளைத்ததை யிழுத்துத்தெங்கின்
கூர்பெறுங்கவந்த மோதுங் குட்டிப்பேயாடல் பாரீர். (உ௬௫)

[ஆ](அ)ங்கொருபுதமைபாரு மறுபடியிபத்தின்சென்னி
தங்கியகரிக் கிரண்டு தலையுமாய்த்தறித்த முண்டந்
தொங்கியநரம்பும்விம்மித் துடித்ததன் றேனிற்றுவ(ப்)
பங்குவாய்த் தலையில்லாத பாகனைப்போ லுமையா. (உ௬௬)

(கு-பு.)—

இந்நூல் இராம சரிதத்தை ஸங்கிரகித்துக் கூறுவது. பெரும்பாலும் கம்ப ராமாயணத்தை அநுஸரித்துள்ளது. இது, நாட்டுப்படலம், நகரப்படலம், பாலகாண்டம், அயோத்யாகாண்டம் ஆரணியகாண்டம், கிஷ்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம் ஆகிய இவற்றுக்கு முறையே, 47, 40, 228, 78, 148, 80, 94, பாடல்களையுடையது. இதில் யுத்தகாண்டம் முற்றுப்பெறவில்லை. 296 பாடல்களே யுள்ளன. இதனை யியற்றியவர் பாண்டியநாட்டைச் சார்ந்த நெடுவை யென்னும் நகரிலிருந்த அண்ணவையரென்பவரது புதல்வராகிய நாராயணையரென்று பாயிரத்தால் தெரிகின்றது. இவரது காலம் ஏறக்குறைய நாற்பது வருடங்களுக்கு முன்பெனத் தோற்றுகிறது.

R. No. 581

Paper. 10½ × 9½ inches. Foll. 83. Lines, 20 in a page. Tamil. Good.

Restored in 1924-25 from a MS. of the library.

பலபேரிற்பாடியகவி.

PALAPĒRIṞPĀḌIYAKAVI.

Same work as that described under No. 369 of the D.C.T. MSS, Vol 1.

(கு-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கின் 369-ஆவது நம்பர் பிரதியைச் சேர்த்து எழுதப்பட்டுள்ளது. அந்தப் பிரதியளவே யிதிலுமுள்ளது.

R. No. 582.

Paper. 10½ × 9½ inches Foll. 41. Lines, 20 in a page. Tamil. Good.

Restored in 1924-25 from a MS. of the library.

(*a*) பலபாடற்றிரட்டு.
PALAPĀDAṞṞIRAṬṬU.

Foll. 1*a*—27*b*.

Same work as that described under No. 367 of the D.C.T. MSS., Vol. 1.

(கு-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக் 367 ஆவது நம்பர் பிரதியில் உள்ள நூலினைப் பார்த்து எழுதப்பட்டது. அந்தப் பிரதியினளவே யிதிலுமுள்ளது.

(*b*) பலபாடற்றிரட்டு.
PALAPĀDAṞṞIRAṬṬU.

Foll. 28*a*—41*a*.

This was restored from the MS. described under No. 368 of the D.C.T. MSS., Vol. 1.

(கு-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக் 368-ம் நம்பர் பிரதியைப் பார்த்து எழுதப் பட்டது.

R. No. 583.

Paper. 10½ × 9½ inches. Foll. 36. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1924–25 from a MS. of M.R.Ry. Veṅku Śāstri Avargaḷ, Kalakkāḍu, Tinnevelly district.

(*a*) வேங்கடேசுரெட்டன் பிள்ளைத்தமிழ்.
VĒNKAṬEŚUREṬṬAN PIḶḶAITTAMIḶ.

Foll. 1*a*—9*b*.

A eulogy in 50 stanzas on Vēṅkatēsuvara Eṭṭar, the Zamindar of Eṭṭayapuram: by Deyvanāyakar.

Incomplete.

Beginning:

வேங்கடேசுரட்டன் பிள்ளைத்தமிழ்.

காப்பு.

மாமேவுதெய்வப் பெருங்கோயிலெனுமூல
மன்றத்துள்மானதாதி
வண்டிமிரநெட்டிதழ்க் கதவந்திறந்துமண
மகரந்தமொழுகவனசப்
பூமேவுகவுண்மதப் பிரளயமுங்கட்கடைப்
பொருங்கடைக் காலாக்கினியும்

புரளாது சிறுகாற்றசைக்கு மிருதழை செவிச்
புகர்முகக் களிறுகாக்க
கோமேவு மசுபதியை முதலானவுபெதி
குலாதிபதி தனபதி பொருங்
குறுகலார் பதிநெளிய முருகிமேல் வரும்வலிய
கும்பகேசபதி மனுபதி
காமேவு மகபதி கிரீடபதி ரத்தினசிங்
காசனாதிபதி பெரிய
கங்கைசூழ் புவிகட்டும் வேங்கடேசுவரட்ட
கனசமுகபதி தழைகவே. (க)

* * * *

(செங்கீரை)

தண்ணமுத மஞ்சனங் குளிரவைத்தாட்டித்
தழீஇயுமீரம் புலர்த்தித்
தகுநுதலிடைப் பூதியிட்டுமேற் காணவொரு
தனிதிலக் காப்புமிட்டு(க்)
கண்ணிலெப் பொருள்களுந் தெரியநிறையஞ்சனங்
கலவித்து மடியில்வைத்துக்
கனிவாயினமுதம் புகட்டிநெய் பெய்தரு
கதிர்க்குஞ்சி யுச்சிமோந்து
பெண்ணணங்கினர்சூழ வைகுநின்றாயரிற்
பேராசைபெருக விண்ணில்
பெறுகுறிதெரிந்துபி னிலக்குறியின்மெல்லப்
பெயர்ந்துநெஞ்சாற றவழ்ந்து
தெண்ணிலா மதிவதன மண்டலம சைத்தினிய
செங்கீரையாடி யருளே
செங்கண்மாலெனு(ம்) வெங்கடேசுவரெட்டேந்திர(சுய)
செங்கீரையாடி யருளே. (க)

End:

வள்ளற்குச்சரியாய் நிதிதரவரு வரதனைப்பெறு தியாகர்
வள்ளத்திற்றிரள்பா லனமுதலி வளர்த்திடு மனுகூலா
கள்ளப்பற்றலர் மார்பிடையுருவு களிப்புடை வடிவேலா
கல்விக்குப்பெரிதா யதனருமை கணித்தவி தரணிகா
விள்ளச்சொற்பிசகா நிசவசன வி[த](ச)க்ஷண சுகுணாளா
வெல்வித்தைக் குலகோர்புகழ்பொதிகை யகஸ்திய நிகர்வோய் நீ
உள்ளத்திற் கனிவாய் வளர்திருப வுருட்டுக சிறுதேரை
யுற்பனமால் வேங்கடேச ரெட்டேந்திர வுருட்டுக சிறுதேரே.

Colophon:

சிறுதேர் முற்றும்.

(கு-பு.)—

இது, எட்டையபுரத்து அரசராகிய வேங்கடேசுவர எட்டர்மீது இயற்றப் பட்ட பிள்ளைத்தமிழ். பத்துப்பருவங்கட்கும் ஐவைந்து பாடல்களாகப் பாடப்

பட்ட ஐம்பது பாடல்களையுடையது. இந்தப்பிரதியில் இடையிடையே சிற்சில பாடல்களில்லை. இயற்றியவர் தெய்வநாயகரென்னும் கவிஞரெனத் தெரி கின்றது.

(b) பூதரவிலாஸம்.

BŪDHARAVILĀSAM.

Foll. 10*a*—28*a*. Fol. 28*b* is left blank.

Similar to the above. The stanzas herein are erotic in character: by Deyvasvâmi.

Incomplete.

Beginning:

பூதரவிலாஸம்.

பொன்னங்கமல மகள்செனிக்கப்
புடவிபுரக்கு மகராசன்
பொழியும் புயல்போ விருதிதியும்
புலவர்க்கருளுஞ் செயபோசன்
கன்னல்மொழியாள் சகதேவி
கருணைபெருகுஞ் சமுகேசன்
கதிக்கும்வைப்பு நதிமாலை
கருத்துள்வைக்கும் விசுவாஸன்
சென்னெல் விளையு மிளசைநகர்ச்
செங்கோல் செலுத்து மகுடேசன்
செழிக்குஞ் சந்திர குலத்தில்நல
சிலவார்குல வுத்தமநேசன்
வன்னமயில்வேல் கழுகுமலை
வரதர்கருணை வளர்த்தாலே
வாழ்வோன் வேங்கடேசுவரெட்ட
மகிபனவனி புரப்பவனே.

* * * *

தினமுமாலை யாதரித்தாய்
தினமுமாலை யாதரித்தேன்
சிறைப்புண்மலிவாய்ப் புலம்பலுற்றாய்
சிறைப்புண் மலிவாய்ப் புலம்பலுற்றேன்
இனமுமோதப் பயப்படுவாய்
இனமுமோதப் பயப்படுவேன்
இருந்தேகமுமேற் பசந்திருந்தாய்
இருந்தேகமுமேற் பசந்திருந்தேன்
கனமுமெலிவாய்க் காட்டுவைநீ
கனமுமெலிவாய்க் காட்டுவன்யான்
கலையுஞ்சரிவா யிருப்பாய் மே
கலையுஞ்சரிவா யிருப்பேன் யான்
தனவான் வேங்க டேசுவரெட்ட
சாமிமோகம் படைத்தவென்னை(ச்)
சரியாயிருந்தாய்[ப்] பூதரமே
சரியாவளையுந் தருவாயே.

End :

முந்தும்புணரி யெழுமலையே மூரசாயிர வருமலையே
　　முகிகுமதவேள் தருமலையே முடியேன்றமரே வருமலையே
பந்தஞ்சேய நீண்மலையே பயிலுங்குயிலுஞ் செய்மலையே
　　பகர்ந்திடாதென் விம்மலையே பருவமடவார் பொருமலையே
சந்தும்புகலார் கும்மலையே தருவரிதையோ ராமலையே. (கக)

பருதிமதியும்வாழி யெழு பருவமுகிலும்வாரி கடல்
　　பணித்தபுவியும்வாழி சொந்தப் பந்துசனமும் வாழி நிதி
பெருகுமிளைசைவாழி தங்கள் பெரியகுலமும்வாழி மகப்
　　பேறுசனித்து வாழி யிந்தப் பிரபந்தமதுவும்வாழி மற்றும்
துரைகளெவரும்வாழி மிகுஞ் சுயசெங்கோலும்வாழி வெற்றி
　　தொடுத்தபுகழும்வாழி யெங்கோன் றுலங்குகுடையும் வாழியிணர்
விரியுமணப்பூந் தளவணியும் விவேகத்துரையா யரசுசெயும்
　　வேங்கடேசுவரெட்ட மனுவேந்தர் வேந்தன் வாழியவே. (ஈ)

Colophon :

　　நளஹு தைமீ 9உ முற்றிற்று.

(கு-பு.)—

இந்நூலும் எட்டயபுரம் அரசராகிய வேங்கடேசுவரட்டர்மீது இயற்றப் பட்டுள்ளதே. பெரும்பாலும் இன்பச்சுவையே மிகுத்துக் கூறுவது. நூறு பாடல்களாலாகியது. இதில் 16, 17, 20, 2!, 24, 25, 30, 31, 42, 43, 52, 53, 76, 77, 84, 85, 90, 91 என்னுமெண்களமைந்த பாடல்களில்லை. இந்நூலாசிரியர் தெய்வசுவாமியென்னுங் கவிஞர்.

(c) வேங்கடேசுவரெட்டன் சோபனம்.

VEṄKAṬĒSUVAREṬṬAN ŚŌBHANAM.

Foll. 28a—36b.

Kummi songs in praise of and wishing long life and benedictions to the Raja of Eḷasainahar of Eṭṭayāpuram. The author seems to be Deyvasvāmi.

Complete.

Beginning :

சோபனம்.

மாமேவுநாளும் வளரி(ள)சைப் பதிமன்னன்
　　வேங்கடேசுவ ரெட்டமன்மேல்
பாமேவு செந்தமிழ்ச் சோபனம் பாடப்
　　பரமகுருபதங் காப்பாமே. (க)

இங்களணியுங் கடவுளரீன்றருள்
　　செல்வவிநாயகனைத்தொழுது,
மங்களமாயிந்தச் சோபனம்பாடவே
　　வாலசரசுவதி காப்பாமே. (உ)

* * * *

ஈசனருள்பெற்றிடும் வேங்கடேசவ ரெட்ட
　　நரேந்திர பூபதிமேல்
காசினியெங்கும் புகழ்ந்திடச் சோபனக்
　　காவியம்பாடித் துதித்திடவே. (௯)

* * * *

கோடானுகோடி மனுக்களெல்லாங் கூடிக்
　　கும்பிட்டுக் கைகட்டி வாய்பொத்தவே
நாடாளும் மால்வேங்கடேசவெட் டேந்திரனை
　　நாடிச் சோபனம் பாடுங்கோடி. (௧௨)

* * * *

நன்னயஞ் சேர்மதுராபுரிபோலிந்த
　　நாட்டிற் பெருஞ்செல்வங் காட்டியுயர்
தென்னிளசைச் சமஸ்தானமும் வாழ்கவே
　　செம்மையாய்ச் சோபனம் பாடுங்கோடி.

End :

வேதாகமங்கட்கும் புராணங்கட்கும் மறை
　　வித்தகர் யாவர்க்குஞ் சோபனமே
சீதாசமேதர்க்கும் வாணிமணாளர்க்குந்
　　தென்கயிலாயர்க்கும் சோபனமே. (௧௫௪)

கங்கைக்கிரீசர்க்குஞ் சோபனமே யிந்தக்
　　காசினியெழுக்குஞ் சோபனமே,

மங்களஞ் சேரெங்கள் கம்பளவங்கிஷமும்
　　வாழியல் லூழியுஞ் சோபனமே. (௧௫௫)

முற்றும்.

(கு-பு.)—

இதுவும் இளசை நகரென்னும் எட்டயபுரத்தரசர் விஷயமானதே. இயற்றியவர் தெய்வசுவாமி கவிஞரெனத் தோற்றுகிறது. இதில், அவ்வரசர்க்குப் பல் சுபங்கள் உண்டாகவேண்டுமென்றும், அவர் நீடூழி வாழவேண்டும் என்றும் வேண்டப்பட்டுள்ளது. ஒருவகைக் கும்மிப் பாடலாலாயது. இதன் பின்னர் 4 பக்கங்களில், தெய்வசுவாமி கவிஞர் பூதரவிலாசமியற்றி யரங்கேற்ற, அதற்கு அரசர் மிகவுவந்து விசேடமாகப் பரிசு அளித்தவிஷயமாகக் காளையையெனபவரியற்றிய 3 பாடல்களும், சிவசாமி பிள்ளை யென்பவர் பாடியபாடல் மூன்றும் எழுதப்பட்டுள்ளன.

R. No. 584.

Paper. 10¼ × 9½ inches. Foll. 82. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1924–25 from a MS. of M.R.Ry. Appuvayyangar Arvagal, Tamil Pandit, Srivilliputtur.

திருவாரூர்க்கோவை.

TIRUVĀRŪRKKŌVAI.

Same work as that described under R. No. 317 ante, but with variations in readings in each stanza and with notes showing also how the stanzas are illustrations of the Ahapporuḷ of the Tamil grammar.

Contains 1 to 385 stanzas.

(கு-பு.)—

இந்நூல் மூவருடத்துக் காட்லாக் 317-ம் நம்பர் பிரதியில் வந்துள்ளதே ; ஆயினும் இதில் பெரும்பாலும் அடிதொறும் பாட பேதங்களும், அகப்பொருட்டுறை (இலக்கண விளக்க)ச் சூத்திரங்களும், அவற்றின பொழிப்புரை கருத்துரைகளும் உள்ளன. இதில் ஒன்று முதல் முந்நூற்றெண்பத்தைந்து பாடல்களேயுள்ளன.

R. No. 585.

Paper. 10¼ × 9¼ inches. Foll. 44. Lines, 20 in a page. Tamil and Grantha. Good.

Transcribed in 1924–25 from a MS. of M.R.Ry. Appuvayyaṅgār Avargaḷ, Tamil Pandit, Srivilliputtur.

வஸ்துநிர்ணயம்.

VASTUNIRṆAYAM.

A prose work describing in detail that Bhaṭṭarpirān or Periayāḻvār established before a Parliament of religions convened in the court of the Pāṇḍya King Vallabhadēva, that Viṣṇu is the Supreme Brahman and obtained the treasure intended for the successful controversialist.

Complete.

Beginning:

பெரியாழ்வார் வஸ்துநிர்ணயம்.

ஸ்ரீயஜ்ஞநஃ வ-ொஸாய வடு யாஜெ நமோ நமஃ |

ஸ்ரீவிஷ்ணு சித்தசித்தாஜவாஸிநெ லோகவாஸிநெ ||

என்று இப்படிப்பட்ட ஹத்து (. . . . . . .) ஸேவ்யமானராய் . . . . . நாமத்தையுடையவராய், ஸ்ரீவில்லிபுத்தூர்ப் பெருமாளுடைய பூர்ண கிருபையினாலே (?) பாத்ரனாய் ஸ்ரீவிஷ்ணு சித்தனென்னப்பட்ட . . . . மத்தை யுடைத்தா . . . .

மதுரையை யாளுகிற ஸ்ரீவல்லப தேவனென்கிற பாண்டிய மண்டலே[ச்]சுவரன் ஒரு நாள் * * * இராத்திரியில் அடைப்பக்காரனுந் தானும் கொங்கணி போட்டுக்கொண்டு * * * * ஒரு பிராமணனுடைய வாசற்றிண்ணைமேலே ஒதுங்கியிருந்தான் * * * * பின்பு தன்னரண்மனையில் பிரவேசித்து * * * விவேக ஸம்பந்நனென்கிற பிரதானி முகத்தைப் பார்த்து ராஜா * * * சொல்லுகிறான். * * * ஸகல மதத்தாரும் தங்கள் தங்களிஷ்ட தேவதைகளையே பரப்ரம்மமென்று ப்ரமாணம்

முதலான லக்ஷணங்களை ஓதிச் சொல்லும்போது கேட்டுக்கொண்டிருக் கிறோமே; விசாரிக்குமிடத்தில் பரதத்வம் ஒன்றேயொழிய ஸஹஸ்ர ப்ரஹ்மங்கள் இல்லையே * * * என்று புத்தியைக் கேட்கிற ராஜாவோடே மந்திரி சொன்ன வார்த்தை :—இதற்கு நாம் * * * பரதத்வ சுல்கமாய் நம்முடைய பொக்கிஷத்திலுள்ள ஒசத்தியாகவிருக்கிற * * * * ரத்நத்தை யெடுத்து . . . தோரண ஸ்தம்பங்கள் நடுவிலே கட்டித் தூக்கி, இந்த வயனம் ஜகத்தெல்லாமறியப்பண்ணினால் நாநா தேசத்திலே யுள்ள ஸகல மதஸ்தர்களும் தன்னாலே வந்து பிரஸங்கம் பண்ணுவர். அப் போது பரதத்வமான தெய்வமும் தன்னாலே வெளியாம் என்று சொன்ன மந் திரி வார்த்தைக்குச் சந்தோஷப்பட்டு இது காரியந்தானென்று அப்படியே விசேஷ ரத்நங்களை வரவழைத்துக் கிழிகட்டித தொங்கவிடச்சொல்லி அந் தச் செய்தியை நாநா தேசங்களுக்குத் தெரியப்படுத்தினார்கள்.

* * * *

ஒரு சமயத்தா[னு](ரு)ம் தம்முடைய தெய்வமே பரதத்வமென்று வாதி த்து ஜயம்பண்ணி(ச்) சுல்க மறுந்து விழும்படி சத்தியமாய்ச் சொல்லி ரத்நத் தைக் கொண்டுபோக மாட்டாமற் போனார்கள்.

அது கண்டு ஜிஜ்ஞாஸுவாய் முமுக்ஷுவான ராஜா சிந்தாக்ராந்தனாய்(ப்) பரிதபித்துக்கொண்டிருக்கும்போது (க்ஷீநவஸரெ) அவருடைய பாக்கிய விசேஷத்தாலே ஸ்ரீவில்லிபுத்தூர் வடபெருங்கோயிலுடையான் தமக்கு நித் தியமாய்(த்) திருமாலை கட்டிச் சமர்ப்பிக்கிற விஷ்ணு சித்தருக்கு ஸ்வப்னத் திலே தெரியப்பண்ணி * * * * அப்போது விஷ்ணு சித்தர் * * * அருளிச் செய்கிறார். வாருங்கோள் சமயத்தார்களே! ஒ(வ்வொ)ரு சமயத் தாராய் வந்து உங்களுங்கள் மதப்ரமாணங்களை நிர்வஹித்து அதுவே சத் தியமென்று சத்தியம்பண்ணி ரத்ந மூட்டையைக்கொண்டு போங்கோ(ள்). இல்லையா(கில்) எங்கள் விசேஷ ப்ரமாணத்தாலே ராஜஸதாமஸத்தாரை ஜயித்து ஸத்யத்தைச் சொல்லிச் சுல்கக்ரயத்தைப்பண்ணி ஜயிக்கிறோமென் றார். அப்போது ஸௌத்ராந்திக வைபாஷிக மாத்யமிக யோகாசார ரென்கிற நாலு விதமான பௌத்தர்கள் வந்து எதிரே நின்றார்கள். . . . . எங்களுக்கு, புத்தனே குரு. க்ஷமாஹிம்ஸா பரோபகாராதி தர்மங்களே மோக்ஷஸாதனங்கள்.

End :

அதற்குப் பின்பு பெரியாழ்வாரென்கிற திருநாமத்திற்கு யோக்யரான ஆழ்வாரை ஸ்ரீவல்லபன் சூரிய ஸோமவீதியில் எழுந்தருளப்பண்ணி * * * * * * * ஸ்வர்ண வஸ்திர பூஷணங்களையும் சுல்க ரத்ந ப்ர முகங்களையும் பெருமாளுக்கு ஸமர்ப்பித்து அதில், சில விசேஷ ஸமாராதன திருப்பணிகள் நடக்கி(ன்)ற[ப்](ற்) போலே நியமித்து * * * ராஜாவே! உன்னுடைய பாக்கியம் என்னவென்று சொல்லலாமென்று கொண்டாடி, அவர்களைக் கடாக்ஷித்து ஸ்ரீ பகவத் பாகவத பரதந்த்ரனாய் தேவ ப்ராஹ்மண மான்யங்கள் முதலானவைகளை நன்றாக ராஜநீதி கிரமத்தாலே பிரஜாபாலனத்தைப் பண்ணும்பிள்ளாயென்று நியமித்தருளினார்.

அந்தப்படி ராஜாவும் மகாப்ரஸாதமென்று கிருதார்த்தனுனேனென்று ஸபரிவாரனுய்ப் பெரியாழ்வாருக்கு ஸாஷ்டாங்கமாகத் தண்டம் ஸமர்ப்பித்து, அவருடைய கிருபா பாத்ரனுய்த் திரும்பி மதுரைக்குவந்து [ராஜா] சுகமாகவிருந்தான்.

அதற்குப் பின்பு பெரியாழ்வாரும் பகவத் பாகவதாசார்ய கைங்கர்ய நிரதராய்(ப்) பகவந் மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டு, எப்போதும் போலே திருநந்தவனத் திருமாலை கந்தபுஷ்பாதிகள் ஸமர்ப்பித்துக்கொண்டு நித்ய க்ருத்யகைங்கர்ய பரராய்ச் சுகமாக எழுந்தருளியிருந்தார்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

Colophon:

கடஎயடு விரோதிகிருத் வருஷம் தைமீ" ௰சஉ திங்கட்கிழமை கூடின சுடதினத்தில் பெரியாழ்வார் வஸ்து நிர்ணயம்.

அந்த சுந்தரர் திருமலை மதுரகவி தாஸன் அப்பு எழியருளப் பண்ணினது. இந்த ஸ்ரீ கோசம் ௬௰ இருபத்தைஞ்சில் முகிந[து](த)து.

அண்ணன் திருவடிசளே சரணம்.

எம்பெருமானுர் திருவடிகளே சரணம்.

(கு-பு.)—

இந்நூல், வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் பெரியாழ்வாரென்று பிரஸித்தி பெற்றுள்ள ஸ்ரீவிஷ்ணுசித்தர், பாண்டியன்-வல்லபதேவனது சபையில் பரதத்வ நிர்ணயஞ் செய்து கிழியறுத்து அரசனுக்கு அநுக்கிரகஞ் செய்த செய்தியைப் பரக்கக்கூறுவது.

பௌத்தம், ஜைனம், சார்வாகம், காபாலிகம், வீரசைவம், பாசுபதம், பாதஞ்ஜலம், கபிலம், பாஸ்கரம், ப்ராபாகரம் முதலிய மதஸ்தர்கள் தங்கள் தங்கள் மதங்கள் சிறந்தனவென வெடுத்துக்கூற, ஆழ்வார் அவற்றை யெல்லாம் யுக்தியினுலும் வேதசாஸ்திரங்களாலும் கண்டித்து நாராயணனே பரதத்வமென்று ஸ்தாபித்த விஷயம் இதில் நன்கு கூறப்பட்டுள்ளது.

இந்தப்பிரதியில் இது முற்றுமுள்ளது.

R. No. 586.

Paper. 10½ × 9½ inches. Foll. 188. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1924-25 from a MS. of M.R.Ry. Rāmakṛṣṇa Ayyar Avargal, Board School teacher, Tirupparankunram, Madura district.

ஜயங்கொண்டார் வழக்கம், உரையுடன்.

JAYAṄKOṆḌĀR VAḶAKKAM WITH COMMENTARY.

A centum of stanzas addressed to Jayaṅkoṇḍār, a form of Śiva, worshipped in Niyamanagar. Each stanza embodies a proverb with an appropriate story in illustration of that proverb : by Muttayyar.

Complete.

Beginning :

செயங்கொண்டார் வழக்கம்.

சீர்பொருந்துந் தென்னியமைச் செயங்கொண்ட
சோளீசர் திருப்பேர் வாழ்த்தி(ப்)
பார்பொருந்துங் குருவிருத்த[ம்](ப்) பா[ர்]மாலே
தனிலுலகப் பழமைச் சொல்லே
யேர்பொருந்துஞ் செந்தமிழால் யான்பாடப்
புவியிலுள்ளோ ரிசைந்து கேட்கக்
கார்பொருந்துந் துதிக்கரத்தான் வெயிலுகந்த
கணபதிதாள் காப்புத் தானே.

(என்றது)—

சீர்தானே பொருந்திய நியமநகரில் செயங்கொண்ட சோளீசுவரர் பெயரி னாலே உலகவழக்கச் சொல்லுக்கு முற்காலத்துத் திருஷ்டாந்தத்தைக் கொடுத்து(க்) குருவிருத்தமாய்ப் பாடவேண்டியதற்குக் காருதவும்படி கொடுக்கப் பட்ட துதிக்கரத்தோடுங்கூடிய வெயிலுகந்த விநாயகன் பாதமே காப்பென் றவாறு.

* * * *

சிலேவேளே வென்றபிரான் தென்னியம
நகரில்வளர் செயங்கொண்டார் மேல்
உலகிலுள்ளோர் வழக்கமதாய்ச் சொன்ன
சொல்லேத் தமிழாலே யுரைப்பதற்கு(க்)
கலேவாணியாகியுல குள்ள மட்டும்
படிக்கவந்த கவிதா கன்னி
மலர்வேதன் மனைவியெந்தன் மனதிலிருந்
திவ்வுரையை வழுத்து வாளே.

* * *

பத்தர்கழுத்தினிற் சூரிதண்டலே யென்
றுமைக்குரைத்த பரமர் மீதில்
வித்தகர் மூன்றுலகவழக்கத்தை யெடுத்
தொருநூறு விருத்தஞ் சொன்னார்
அத்தைதிகரெனச்செயங் கொண்டார் மீதில்
மூத்தையன் சிற்றறிவி னாலே
மத்தகெசந் தனகுமுன்பின சிற்றெறும்பு
நடந்ததென வசனித் தேனே.

* * *

நல்வேடன் வான்மீகர் சத்தரிஷிகளைச்
சேர்ந்து ராம மந்திரம்
சொல்வழுவில்லான் தகர்த்த திறமையிற்பின்
வருங்கதை முன்சொனரு ரன்றோ
வில்விசயன் தேர்வெல்லக் கணைதொடுத்த
செயங்கொண்டார் விளங்கு நாட்டில்
கல்விதனககழகு கசடற மொழிதவென
வன்றோ கருது வாரே.

(எ-கு.)—

வால்மீகிரிஷி வேடனாக வனசஞ்சாரமாய்த் திரியும் நாளிலே சப்த ரிஷிகளைக் கண்டவுடனே நல்லறிவுதோன்றி வந்து எனக்குப் புத்தியென்னவென்று கேட்க, அவர்கள் ராமமந்திரங் கட்டளையிட, அது சொல்லத் தெரியாதென்ன, இந்த மரத்தின்பெய ரென்னவென்று ரிஷிகள் சொல்ல, அது மராமரம் என்றுசொல்ல, அந்த மரத்தின் பெயரைத்தானே சொல்லிக்கொண்டிருவென்று * * * பின்வருங்கதை சொல்லத்தொடங்கினார்.

ஆதலால் கல்விக்கழகு கசடறமொழிவதென்று உலகஞ் சொல்லுமென்றவாறு. (க)

End :

சிவயோகி வெகுளியினால் வரரிஷியு
மிடபமெனச் செனித்தான் பாரில்
பவமடியா ரகத்துமைலிங்கா புராணியை
வனைத்த பழியின் தோஷம்
நவதீர்த்த மாடியன்றோ தீர்ந்ததென்றார்
செயங்கொண்டார் நலஞ்சேர் நாட்டில்
தவமுடையோர் மனமுறியச் செய்தவர்க்குப்
படர் வினைதானென் னென்பாரே.

(எ-கு.)—

பூலோகத்திலே வரரிஷியென்றொரு ரிஷி அதிசயமாகத் தபசு பண்ணிக்கொண்டிருந்தார். அவர் தவசு மகிமையை மற்ற ரிஷியெல்லாங் கேட்டிருந்து, அகஸ்தியரோடும் ஐம்பதுபேர் தபோதனர்கள் அவரைப் பார்க்கவேணுமென்று அந்த ரிஷியண்டைக்கு வந்தார்கள். வந்தவர்களை வரரிஷியானவர் அங்கீகாரம் பண்ணி வணங்காமல் தன்னுடைய தவசின் கர்வத்தினாலே அவமதிப்பாய்(ச்) சட்டைபண்ணாமலிருந்தார். அதுகண்டு தவத்தை ஆதரிக்குந் தபோதனர்களைம்பதுபேரும் வெகுண்டு கோபமாகி எங்களை யிகழ்ச்சியாய்(ச்) சட்டைபண்ணாமலிருந்த ஆங்காரத்தினாலே எருமைக்[கி](க)டாவாய்ப் பிறக்கக் கடவதென்று சபித்தார்கள். அந்தச் சாபமொழி கேட்டவுடனே வரரிஷி பயந்து [ரொ](திர)ம்பவும் வணங்கினான். அடியேன் செய்தபிழை பொறுத்து ரக்ஷிக்க வேணுமென்றுசொல்ல அப்போது தபோதனர்களிரக்கமாகி வரரிஷியைப் பார்த்து, நீ அசுரர் பெருங் குலத்திலே மகிஷாசுரனென்று பிறந்திருந்து ராஜ்ஜியத்தை ஆண்டுகொண்டிரு * * * பரமேசுவரி திருவண்ணாமலையிலே தவசு பண்ணவருவாள் - அப்போது உன்னுடைய சாபமும் [தீ](தா)பமுந் க்ஷணப்பொழுதிலே அவள் தீர்த்துவிடுவாள் என்றும், அப்பால் நீ நல்ல கதியடைவாய் என்றும் சொல்லிப்போனார்கள். * * * * * * * தபோதனர் கோபத்தினாலே ரிஷி மகிஷமானான். படிகலிங்கத்தைக் கழுத்தில்வைத்திருந்தவனை விதனப்படுத்தியதால் அந்த ஈசுவரி கையில் லிங்கம் ஒட்டிக்கொண்டது. ஆதலால் பரப்பிரமமாகிய ஐயங்கொண்டாருலகில் பெரியோர்களுள்ளம் பேதிக்கச் செயப்படாதென்று உலகவழக்கம் சொல்லும் என்றவாறு. (உ)

(கு-பு.)—

இந்நூல் தென்திருப்பேரைநகரில் கோயில்கொண்டருளிய ஐயங்கொண்டா ரென்னும் சிவபிரான்மீது பாடப்பட்ட நூறு பாடல்களையுடையது. இதன் ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு உலக வழக்குச் சொல்லும் (பழமொழியும்) அதற்குரிய பழையகதையும் அமைந்துள்ளன. இயற்றியவர் முத்தையரென் பவர். நடை சாதாரணமானது. இந்தப்பிரதியில் இந்நூல் உரையுடன் முற்றுயிருக்கிறது.

R. No. 587.

Paper. 10¼ × 9½ inches. Foll. 8. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1924-25 from a MS. of M R.Ry. Malayayyāppiḷḷai Avargaḷ, Alwartirunagari, Tinnevelly district.

குடந்தையந்தாதி.
KUDANDAIYANTĀDI.

A poem in praise of Ārāvamudan, a form of god Viṣṇu, worshipped in the sacred shrine in Tirukkuḍandai, i.e., Kumbakonam in the Tanjore district.

Contains 1 to 55 stanzas and breaks off in the 56th stanza.

Beginning:

குடந்தையந்தாதி.

ஆரா வமுதி னருட்குடந்தை யென்பார்க்குத்
தீரா வினையெல்லாம் தீர்க்குமே—பாரா[ழு](ரு)
மாமகிழுந் தாள்வ . . . . ரும் வந்திறைஞ்ச(த்)
தாமரைச் செங் கண்வாழ்வோன் றான்.

* * * *

போதனு மானு மபூவுந்தரித்துப்புரிந்து நட
பாதனுமானு . . வானும் பகைத்தவன் பாற்
றூதனு மானுமறவியும் போமென்ற சொற்பவள
மாதனுமானுங் குடந்தையின் கண்வாழருந்தவனே. (உ)

வளரிக்குநெல்லும் பசும் பூகமுந் தம்முண்மாறு கொண்டே
கிளரிக் குடந்தை . . . . . னே கேசவவாவெனவே
முளரிக் குளக்கய முன்னுளழைக்க முன்வந்து நின்று
யுளரிக்கும் மைவர் குழற் . . . . ன்றெளிவதுவே. (௯)

End:

பதந்தந்தவாவறுத் தென்னையு மாளுங் கொல்பாசடைக்கே
யிதந் தந்தவாரிதிக் கண்வளர்ந்தோன் விதியார் மறையின்
மதந்தந்தவாவிக்குரு கூரரசுமகிழ் குடந்தை
யிதந்தந்தவாரண முய்யவப்போ[ல](த)ஞ்ச லென்றவனே. (௫௫)

என்ற வரைப்புரம் போகாமுனங்குவிழைத் தெதிரா
நின்றவ . . . .

(கு-பு.)—

இது, திருக்குடந்தையென்னும் கும்பகோண க்ஷேத்திரத்தில் கோயில் கொண்டருளிய ஆராவமுதனென்னும் திருமாலின் தோத்திரம். அந்தாதித் தொடையாலாயது. இந்தப் பிரதியில் 1-55 பாடல்களும், 56-வது பாடலின் முதலடியுமே யுள்ளன. உள்ள பாடல்களிலும் இடையிடையே சிற்சில பதங்களும் தொடர்களும் விடப்பட்டுள்ளன இந் நூலாசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை

R. No. 588.

Paper. 10½ × 9½ inches. Foll. 42. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1924-25 from a MS. of M.R.Ry. Tambu-Śaṭakōpa Ayyangār Avargaḷ, Alwartirunagari, Tinnevelly district

திருவாய்மொழியருஞ்சொல்விளக்கம்.
TIRUVĀYMOḺIYARUÑCOLVIḶAKKAM.

A gloss on the difficult expressions found in the different commentaries written by Nambiḷḷai and others on the Tiruvāymoḻi.

The author of the gloss appears to be a disciple of Periyanambi.

Complete.

Beginning :

திருவாய் மொழியருஞ்சொல் விளக்கம்.

முதற்பத்து-உயர்வற, வீடுமின், பத்துடை.

[illegible] |

[illegible] ||

ஸ்ரீ[illegible].

தரிசு—கடன், தண்ணீர்த்துரும்பால், (நீர் தொறும்பரந்) கெண்டிகளிலே தீர்த்தஞ்சாப்பிடுகிற பொழுது கெண்டி மூக்கைத் துரும்பு முதலான[து] (வை) அடைத்துக்கொண்டு சாப்பிடப் போகாமல் பந்திக்கும். இத்தால், பிரதிபந்தக மென்றபடி.

ஒடுங்கவவனித்யத்ர :—எம்பெருமானார் ஸ்ரீபாதத்திலே புக என்றது, திருவடிகளிலே தண்டஞ் சமர்ப்பித்து நிற்கவென்றபடி. * * * கழுத்திலேயோலை கட்டித் தூதுபோகையாவது, அங்குப்போனால் சொல்லுகிற வார்த்தையை நெஞ்சிலே தரித்துக்கொண்டு போகிறதைப்பற்றிக் கழுத்திலே யோலைகட்டி யென்றது. இத்தால் அவனுடைய சௌலப்யாதிசயம்

End :

பேரெயுறைகின்றபிரான் :—சூழற்று என்கிற விடத்திலே றகரம் ஒற்றன்று. ஒரு அக்ஷரமாக வாசிப்பது. உடன் கிடந்தவனை மடிதடவினவனைப்போலே :—உடன் கிடந்தவன் மடியிலேயிருக்கிற த்ரவியத்தை வஞ்சித்து எடுத்துக்கொண்டு, பின்பு, நம்மை விச்வஸித்திருந்தவனை நாமிப்படி

வஞ்சித்தோமே யென்று அநுதபிக்கு மாபோலென்றபடி. * * *
* * * *

முனியே நான்முகன் ப்ரவேசே :—தலக்கற்று—லஜ்ஜையற்று, தலக்கு—லஜ்ஜை.

எனக்காராவமுதாய் : தவதவ நாறுகை—தபோகந்தியாயிருக்கை.

முதல் தனிவித்தேயோ :—இட்டளம்—நெருக்கம். நெருக்கமானால் பிரவாஹத்திலே மிகவுஞ் சுழிக்கும்.

ஹரி : ஓம்; சுபமஸ்து. அவிக்நமஸ்து. ஆழ்வார் திருவடிகளே சரணம்.

Colophon:

திருவாய் மொழியருஞ் சொல் விளக்கம் முற்றிற்று

(கு-பு.)—

இது, நம்மாழ்வாரருளிய திருவாய்மொழி யென்னும் பிரபந்தத்திற்கு நம்பிள்ளை முதலிய பெரியாரியற்றிய வியாக்யானங்களிலுள்ள அரியபதங்களின் பொருள்களை விளங்கத் தெரிவிப்பது. இவ்வுரையாசிரியர் பெரிய நம்பி யென்பவரது சிஷ்யர்களுள் ஒருவரெனத் தோற்றுகிறது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

R No. 589.

Paper. 10½ × 9½ inches. Foll. 11. Lines, 20 in a page Tamil. Good.

Transcribed in 1924–25 from a MS. of M.R.Ry. L. A Veṅkusāmi Ayyar Avargaḷ, Pleader, Dindigul, Madura district.

பழநியந்தாதி.

PAḺANIYANTĀDI.

A poem in praise of Muruhakkaḍavuḷ or god Subrahmaṇya, worshipped in the sacred Śaiva shrine in Paḻani. From the concluding stanza of this work, it is made out that the author was Bālasuppiramaṇiyar.

Complete.

Beginning:

வாழ்த்து.

இதத்தாரை ஞானச் சிறுவாசல் வீடுகண்டேறியநற்
பதத்தார்தொழுந்தென் பழநியந்தாதியைப்பாடுதற்குச்
சிதத்தானை யோரைங்கரத்தானை மேகத்திரள் பொழியும்
மதத்தானை யானைமுகத்தானை நாளும் வணங்குவனே.

* * * *

ஹரிஃ ஓம்.

பழநியந்தாதி.

திருப்பணிமிக்க விடத்துறைகார ணன்சிரெழில்வாய்த்
திருப்பணியுற்ற பழனிப்பிரான் சிலைச்சேரன் நவத்
திருப்பணிசெய்க்குடிலார் குகன்மீது செழித்த செவ்வாய்த்
திருப்பணிசைக்கவலன் சரணாமென் சென்னியதே. (க)

சென்னிக் கருமை யம்மான்பிரம்ப(ா)லடி தீண்டிடநீர்
சென்னிக் கருமையம்மாலருளீசன் திருப்புதல்வா
சென்னிக் கருமையம்மால் வடிவாயிசைத்தோவிளங்குஞ்
சென்னிக் கருமையம்மானே பழநிச் செகத்தரசே. (உ)

End:

கனகத்தி வலம்பெறுஞ்சூர் வென்றோன் மெய்க்கண்டூரவ வா
கனகத்தி வலப்பழனுபுரியன் கதிரவன் சூழ்
கனகத்திவலம் வருமுருகோனைக் கருதினரெங்
கனகத்திவலம் புரிகுவள் செங்கமலைத் திருவே. (ா)

சீர்வாழி தென்பழனு புரிவாழி செழித்தவை[ய]கா
லூர்வாழி யிந்தவுலகெங்கும் வாழியுயர் பணிசெய்
வார் வாழிநாளும் புகழ்வாலசுப்பிரமணியன் தமிழ்(ப்)
பேர்வாழி மேன்மை யந்தாதியும் வாழிபெருகியதே.

Colophon:

பழநியந் தாதியெழுதினது முற்றும்.

சரவணோற்பவ சண்(முக) முருகேசனே துணை.

முற்றும்.

(கு.பு.)—

இது, பழநியென்னும் மலையில் கோயில் கொண்டுள்ள முருகக் கடவுள் மீது அந்தாதித் தொடையாலமைந்த துதி. காப்பு வாழ்த்துப்பாடல்களுடன் 103 கட்டளைக் கலித்துறைகளையுடையது. செய்யுள் நடை நன்றாகவிருக்கிறது இந் நூலாசிரியர் வாலசுப்பிரமணியரென்னும் பெயரினரென்பது சீர் வாழியென்னும் இறுதிச் செய்யுளால் தெரிவதன்றி, அவரது வரலாறு முதலியவொன்றும் புலப்படவில்லை. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

R. No. 590.

Paper. 10½ × 9½ inches. Foll. 114. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1924-25 from a MS. belonging to the Mahārāja of Ettayapuram, Tinnevelly district.

(a) உறையூர்க்காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ்.

URAIYŪRKKĀNTIMATIYAMMAI PILLAITTAMIL.

Foll. 1a—43a.

A kind of Prabandha known as Pillaittamil written in praise of goddess Pārvatī, worshipped under the name Kāntimatiyammai in Uraiyūr in the Trichinopoly district.

Complete in 112 stanzas.

Beginning :

உறையூர்க் காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ்.

காப்புப் பருவம். விநாயகர் துதி.

மாமேவு மேனியஞ் செக்கர்வான் கரக்கவுண்
　மதக்கமஞ் சூழ் கொண்டலோர்
வண்கோட் டிளம்பிறை விளங்கு புகர்
　மீன்செம்மை வாய்(த்)த நயனக்கதிரவன்
காமேவு குடிலத் தடித்தொளிர் தரச்சுரர்
　கணம் புகழ்ந்தேத் தெடுப்பக்
களிமிக்கு மண்ணுலகம் விண்ணுலக மாகவமர்
　கடவுளடி முடி சூடுவாம்
தேமேவு கொன்றையணி துன்றுசடை யெந்தையார்
　சிந்தைத் தடத்துண் மலரும்
செங்குங்கு மத்தாது விழியணி மொழித்தேன்
　றிகழ்ந்த முக வம்போருகப்
பூமேவு பொற் கொடியை மற்கெழுமு
　மளவில்பல புவனப் பரப்பெலாமுன்
பொறையுயிர்த் தாளை நிறை யுறையூர்ப் பிராட்
　டியைப் புகழ்தமிழ்க் கவிதழையவே. (க)

*　　*　　*　　*

செங்கீரைப் பருவம்.

பொன்செய்த செஞ்சடைப் பெருமான் றிருக்கையாற்
　பொங்காழி யெழு செங்கதிர்ப்
புத்தேட னகையிழந் தாங்கக் கதிர்க்குரிய
　புண்டரிக மனை யாட்டியுங்
கொன்செய்த நகையிழந் துறுகணீர் சிந்தியுட்
　கொள்ளும் பயத் தழுந்தக்
கோலம் பொலிந்தொளி கொள் செங்கையம்
　பங்கயங் குப்புறநிமிர்த்து நிலமீ
மன்செய்த கொங்கையந் திருமகளை யவளுரிய
　மருமகளை யருளு மென்றூண்
மரையொன் றெடுத்தொன்று கோட்டி யிருள்
　வீட்டியொளிர் வள்ளைக்கு தம்பையாடத்
தென்செய்த தமிழ்மணக் கோழிநகர் வாழுமயில்
　செங்கீரை யாடி யருளே
சிமயம் பிறங்கவள ரிமயம் பிறந்தகுயில்
　செங்கீரை யாடி யருளே. (க)

End :

தாவிலொளி யீனுமணி நூபுரம் விராவுபொற்
　றாமரைத் தாளு மருணன்
றன்னிளங் கதிரொத்த செம்பட் டுடுத்தித்
　தயங்குமே கலை நுண்ணிடை[யு]

மாவியென்றுந் தளிர் மருட்டி வரதாபயம்
    வழங்கு செங்கையு மெய்ஞ்ஞான
மடைதிறந் தொழுகுமிரு கொங்கையு மிலங்குதிரு
